ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (28.4.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மனோ தங்கராஜ் அவர்களுக்கு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளார்.

ஆளுநர் மாளிகையில், நேற்று முன்தினம் (28.4.2025) தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மனோ தங்கராஜ் அவர்களுக்கு மலர்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக விவாதிக்க

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டுக!

பிரதமர் மோடிக்கு கார்கே கடிதம்!

புதுடெல்லி, ஏப். 30 - நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டி பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக விவாதிக்க கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லி கார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார். ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் பலியாகினர்.

இதனைத் தொடர்ந்து, ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதலை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை கூட்டக் கோரி பிரதமருக்கு மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், "இந்த தருணத்தில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியம். நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் சிறப்புக் கூட்டத்தை விரைவில் கூட்டுவது முக்கியமானது என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன. பஹல்காம் தாக்குதலுக்கு எதிராக நமது ஒற்றுமையையும் தீர்மானத்தை யும் வெளிப்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த நடவடிக்கையாக அமையும்.

இந்த கூட்டத்தொடர் கூட்டப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதேபோல் நாடாளுமன்ற இரு அவைகளின் சிறப்பு கூட்டத்தை கூட்டுமாறு பிரதமர் மோடியை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தி உள்ளார். மேலும் மத்திய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கும் என்றும் ராகுல் காந்தி உறுதி அளித்துள்ளார்.

'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம்: உயர் இரத்த அழுத்தம் - நீரழிவு நோய் பாதிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

கணக்கெடுப்பின் முடிவு குறித்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.30-

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாட்டில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்களின் பாதிப்புகளை கட்டுப்படுத்துகிறது என்ற கணக்கெடுப்பின் முடிவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மருத்துவச் சேவைகளை மட்டுமல்ல, அதன் வழியே சிறப்பான முடிவுகளையும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் அளிக்கிறது.

உயர் இரத்த அழுத்தத்தை 17 விழுக்காடும், நீரிழிவு நோயை 16.7 விழுக்காடும் கட்டுப்படுத்திப் பொது மருத்துவச் சேவையின் வெற்றிக்கான அலகு கோலை மாற்றியமைத்து வருகிறது.

மக்கள் மருத்துவமனைகளைத் தேடி வருவதற்காகக் காத்திராமல், மக்களின் வீடுகளை நாடிச் சென்று ஈட்டிய வெற்றி இது! இந்தியா முழுவதும் பொதுமருத்துவச் சேவைக்கான 'மாதிரி'யாக இது மாறியுள்ளது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

திருச்சிக்கு மே 8 - அன்று முதல்வர் வருகை!

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டச் செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம்!

கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

திருச்சி மாவட்டத்தில் 2 நாட்கள் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் தளபதி அவர்கள் 08.05.2025 அன்று விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தர உள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் வருகை தொடர்பாக, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் 04.05.2025 அன்று காலை 10 மணியளவில் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டம் மத்திய மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவர் பேரூர் தர்மலிங்கம், வடக்கு மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவர் எஸ்.ஏ.அம்பிகாபதி, தெற்கு மாவட்டக் கழகத்தின் அவைத் தலைவர் பண்ணப்பட்டி.என்.கோவிந்தராஜ் ஆகியோர் தலைமையில் நடை பெறும். அதுசமயம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்/ பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்/ முசிறி சட்டமன்ற உறுப்பினர், காடுவெட்டி. ந.தியாகராஜன், மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர். க.வைரமணி ஆகியோர் முன்னிலை வகிப்பார்கள்.

இக்கூட்டத்தில், மாநகர, நகர, பேரூர், ஒன்றிய கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கே.என்.நேரு,
கழக முதன்மைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்